## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 63/2020 | Date : 29.08.2023 | DW1 |
|---|---|---|
| Name: கோகுல் சந்தோஷ் | S/o.**செல்வராஜ்** | |
| Evidence Recorded Time: 12.11 P.M. to 12.15 P.M | | |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

எனக்கு தற்போது 31 வயதாகிறது. எனது பிறந்த தேதி 02.12.1992. நான் பி.ஈ மெக்கானிக்கல்ஸ் படித்துள்ளேன். வாதியை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் எனக்கு நான்காண்டுகளாக தெரியும், என் அப்பாவிற்கு நீண்டகாலமாக தெரியும். வாதி வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் நாங்கள் வாங்கிய சொத்தை வாதிக்கு கிரையம் கொடுக்க உரிமை இருப்பதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தை யாரிடமிருந்து விலைக்கு வாங்கினோம் என்றால் 2, 3 பிரதிவாதிகளிடம் இருந்து கிரையம் வாங்கினேன். 2, 3 பிரதிவாதிகளுக்கும் வாதிக்கும் என்ன உறவு முறை என்றால் வாதிக்கு 2, 3 பிரதிவாதிகள் சகோதரிகள் ஆவார்கள். 4ம் பிரதிவாதி என்னுடைய அப்பா ஆவார். வாதியும், 2, 3 பிரதிவாதிகளும் எந்த மதத்தை சார்வந்தவர்கள் என்றால் முஸ்லீம் மதத்தை சார்ந்தவர்கள் ஆவார்கள். வாதியும், 2, 3 பிரதிவாதிகள் என்ன சட்டத்தை பின்பற்றி வருகிறார்கள் என்றால் தெரியாது. வாதியும், 2, 3 பிரதிவாதிகள் முகமதிய சட்டத்தை பின்பற்றி வருகிறார்கள் என்றால் தெரியாது.

<u>(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)</u>

ஒம்/-DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.